# பாடம் 4: தூய திரித்துவமும் ஒன்றிப்பும்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 3 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், தூய கத்தோலிக்கத் திருச்சபை வழியாக கடவுள் தம்மை மனிதகுலத்திற்கு அறிமுகம் செய்தார் என்பதை நாம் கண்டறிந்தோம். புனித ஆசிரியத்தால் பாதுகாக்கப்பட்ட புனித மறைநூல் மற்றும் புனித மரபின் வழியாக அவர் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இந்த பாடத்தில், புனித மறைநூல் மற்றும் புனித மரபில் கடவுள் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய மிக முக்கியமான காரியங்களில் ஒன்றை, அதாவது ஒரே கடவுளில் மூன்று ஆட்களின் ஒன்றிப்பு என்ற அவரது இயல்பு குறித்து நாம் பார்ப்போம்.

**தற்போதைய பாடம்:**
1. ஒரே கடவுள் மட்டுமே இருக்கிறார் என்று விவிலியம் உறுதிப்படுத்துகிறது. அது அரசாளும் வேறு தெய்வங்களின் ஆற்றலை உறுதி செய்யவில்லை. படைப்பின் தொடக்கத்தில் இருந்தே ஒரேயோர் அரசாளும் கடவுளைப் பற்றியே பேசுகிறது.

இணைச்சட்டம் 6:4: “இஸ்ரயேலே, செவிகொடு! நம் கடவுள் ‘யாவே’ (ஆண்டவர்) ஒருவரே, ‘யாவே’ மட்டுமே.”

திருப்பாடல் 86:10: “நீர் உயர்ந்தவராகவும் வியத்தகு செயல்களைச் செய்கிறவராகவும் இருக்கின்றீர், நீரே கடவுள், வேறெவரும் இல்லை.”

1 கொரிந்தியர் 8:4: “… ஒருவரைத் தவிர வேறெந்த கடவுளும் இல்லை.”

கலாத்தியர் 3:20: “… இன்னும் கடவுள் ஒருவரே.”

2. அதே நேரத்தில், மூன்று வேறுபட்ட ஆனால் சமமான ஆட்கள் கடவுளாக இருக்கின்றனர் என்று விவிலியம் உறுதிப்படுத்துகிறது.

**அ) தந்தை கடவுளாக இருக்கிறார்.**
எபேசியர் 4:5,6: “ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கே உண்டு, மேலும் அனைவருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே, அனைவருக்கும் மேலாக, அனைவரின் வழியாக, அனைவரின் உள்ளும் இருக்கிறார்.”

**ஆ) மகன் கடவுளாக இருக்கிறார்.**
யோவான் 1:1: “தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.”

**இ) தூய ஆவியும் கடவுளாக இருக்கிறார்.**
திருத்தூதர் பணிகள் 13:2: “ஒரு நாள் அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் கூறியது, ‘பர்னபாவும் சவுலும் எனக்கு வேண்டும், நான் அவர்களை அழைத்துள்ள பணிக்காக ஒதுக்கி வையுங்கள்.’”

3. தந்தை, மகன், மற்றும் தூய ஆவியாரை ஒன்றாகக் கொணரும் விவிலியம், மூன்று வெவ்வேறான ஆட்களான இவர்கள் தங்கள் இறைத்தன்மையால் ஒன்றித்து இருக்கின்றனர் என்பதை தெளிவான விதத்தில் காட்டுகிறது. கடவுளின் இந்த மூவரின் ஒன்றிப்பை விவரிக்கப் பயன்படுத்தும் பதமே “திரித்துவம்” (மூவொருமை).

மத்தேயு 28:19: “அனைத்து நாடுகளுக்கும் சென்று, சீடர்களை உருவாக்குங்கள்; தந்தை, மகன், மற்றும் தூய ஆவியாரின் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்கு கொடுங்கள்”

2 கொரிந்தியர் 13:13: ''ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், மேலும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.''

1 பேதுரு 1:1-2: ''போந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா மற்றும் பித்தினியாவில் சிதறுண்டு வேற்றாராய் வாழும் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு, இயேசு கிறிஸ்துவின் திருத்தூதன் பேதுரு எழுதுவது. தந்தையாம் கடவுளின் முன்னறிவின்படி, ஆவியாரின் புனிதமாக்கலால், இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியவும் அவரது குருதியால் தெளிக்கப்படவும் உங்களுக்கு அருளும் அமைதியும் பெருகுவதாக.''

4. ஹிப்போ புனித அகுஸ்தீன் (வட ஆப்ரிக்க ஆயர், 4ஆம் நூற்றாண்டு), தந்தை மற்றும் மகனுக்கு இடையிலான ஒன்றிப்பை மிகுந்த விவரத்துடன் விவரித்துள்ளார். தந்தை மற்றும் மகனுக்கு இடையிலான இந்த ஒன்றிப்பை, ''ஒருமைப்பாட்டை வழங்குகிறவர்'' என்ற முறையில் தூய ஆவியாரின் பங்காக அவர் சாற்றுகிறார்.

5. நசியான்சுஸ் புனித கிரகோரி (கொன்ஸ்தாந்திநோபுள் பேராயர், 4ஆம் நூற்றாண்டு), புகழ்பெற்ற கப்பதோக்கிய தந்தையரில் ஒருவரான இவர், மூவொரு கடவுளின் மூன்று ஆட்களின் ஒருவர் மற்றவருடனான உறவுநிலையை விவரிக்க 'பெரிக்கோரீசிஸ்' என்ற கிரேக்கப் பதத்தைப் பயன்படுத்துகிறார். பெரிக்கோரீசிஸ் என்ற பதம் ''ஒன்றித்த அகவுறைவு'' மற்றும் ''சுற்றி நடனமாடுதல்'' ஆகியவற்றைக் குறிக்கிறது. முற்கால திருச்சபை தந்தையர், பெரும் நடனத்தில் செய்வது போன்று, நித்திய கடவுளை மூன்று ஆட்களில் விவரித்தனர்.

6. திருச்சபை தந்தையர், திருச்சபையின் வரலாறு முழுவதும், புனித மறைநூலில் பிரதிபலிக்கும் கடவுளின் திரித்துவ இயல்பின் உண்மையைத் தற்காத்து வந்துள்ளனர். திரித்துவம் குறித்த பல தவறான படிப்பினைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன, குறிப்பாக ஓராள்வாதம், தாழ்நிலைவாதம், மற்றும் மூவிறைவாதம் போன்றவை.

**தெர்த்துலியன், பிராக்செயசுக்கு எதிராக 2, கி.பி. 216:** ''நாம் உண்மையில் ஒரே ஒரு கடவுளை நம்புகிறோம், ஆனால் இந்த அருள்திட்டத்தின் கீழ், இந்த ஒரேயொரு கடவுளுக்கு ஒரு மகனும் இருக்கிறார் என்று நாம் நம்புகிறோம், அவரது வாக்கு, இவர் அவரிடமிருந்து புறப்படுகிறார், மேலும் இவர் வழியாகவே அனைத்தும் படைக்கப்பட்டன, அவராலன்றி எதுவும் படைக்கபடவில்லை… இவர் தந்தையால், அவரது சொந்த வாக்குறுதியின்படி கீழே அனுப்பப் பெற்றார் என்று நம்புகிறோம், தூய ஆவியார் என்ற துணையாளர், தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாரில் விசுவாசம் கொண்டுள்ளோரைப் புனிதப்படுத்துகிறவர்…''

**ஹிப்போ- அகுஸ்தீன், திரித்துவம் 1:4:7, கி.பி. 408:** ''என்னால் வாசிக்க இயன்ற பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு நூல்களின் கத்தோலிக்க விளக்குநர்கள் அனைவரும், கடவுளாகிய திரித்துவம் பற்றி எனக்கு முன் எழுதிய அவர்கள், மறைநூல்களுக்கு ஏற்ப கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர், அதாவது தந்தை, மகன், மற்றும் தூய ஆவியார் பிரிக்க முடியாத சமத்துவத்துடன் இறை ஒன்றிப்பை உருவாக்கும் ஒன்றான அதே பொருள்மத்தைக் கொண்டுள்ளனர்; ஆகவே அங்கு மூன்று தெய்வங்கள் இல்லை மாறாக ஒரே கடவுளே இருக்கிறார், இருந்தாலும் தந்தை மகனைப் பிறப்பிக்கிறார், ஆகவே மகனாக இருக்கிறவர் தந்தை அல்லர்; மேலும் தூய ஆவியார் என்பவர் தந்தையோ மகனோ அல்லர், மாறாக தந்தை மற்றும் மகனின் ஆவியே, அவரும் கூட, தந்தை மற்றும் மகனோடு சமநிகராகவும், திரித்துவத்தின் ஒன்றிப்பைச் சார்ந்தவராகவும் இருக்கிறார்.''

**கிளேர்வாக்ஸ் புனித பெர்னார்து, மறையுரை 8, இனிமைமிகு பாடல்கள் மீதான மறையுரைகள்:** நாம் சரியாகப் புரிந்து கொண்டால், தந்தை முத்தமிடுகிறவராக இருக்கிறார், மகன் முத்தமிடப் பெறுகிறவராக இருக்கிறார், பின்பு அந்த முத்தத்தில் தூய ஆவியாரைக் காண்பது தவறாக இருக்க முடியாது, ஏனெனில் அவர் தந்தை மற்றும் மகனின் குலைவுறாத அமைதியாகவும், அவர்களின் அசைவுறாத பிணைப்பாகவும், அவர்களின் பிளவுறாத அன்பாகவும், அவர்களின் பிரிவுறாத ஒன்றிப்பாகவும் இருக்கிறார்.

7. மூன்று ஆட்களில் வெளிப்படும் ஒரு கடவுளே இருக்கிறார் என்று தூய கத்தோலிக்கத் திருச்சபை கூறுகிறது. தூய திரித்துவம் மீதான நமது நம்பிக்கை மூன்று எப்படி ஒன்றாக முடியும், அல்லது ஒன்று எப்படி மூன்றாக முடியும் என்ற கணித விவாதமாகச் சுருங்கிவிட

முடியாது. அவரது வகையில் கடவுள் ஒருவராக இருக்கிறார், ஆனால் அவரது இருப்பில் காணப்படும் ஆட்களின் எண்ணிக்கையில் மூன்றாக இருக்கிறார்.

இது ஒரு முரண்பாடு அன்று, மாறாக, கடவுள் என்ற ஒன்றிப்பின் (குழுமத்தின்) விவரிப்பு. நிறைவான அன்பைப் பகிரும் ஆட்களின் ஒரு குழுமமாக கடவுள் இருக்கிறார். விவிலியத்தில், தம்மைப் பின்பற்றியோரிடம் இயேசு தம் தந்தையைக் குறித்து பேசியபோது பயன்படுத்திய வார்த்தைகள் இந்த உறவுநிலையை மிகவும் அழுத்தமாக விவரிக்கின்றன:

யோவான் 17:20-23,26: ‘‘நான் அவர்களுக்காக மட்டும் செபிக்கவில்லை, அவர்களின் போதனை வழியாக என்னில் நம்பிக்கை கொள்வோருக்காகவும் செபிக்கிறேன். அவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே, நீர் என்னிலும் நான் உம்மிலும் இருப்பது போன்று, அவர்களும் நம்மில் இருப்பார்களாக, அதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். நீர் எனக்கு அளித்த மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன், இவ்வாறு நாம் ஒன்றாய் இருப்பது போன்று அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. அவர்களில் நானும் என்னில் நீரும் இருப்பதோடு, அவர்கள் ஒன்றிப்பில் நிறைவடைந்தால் நீரே என்னை அனுப்பினீர் என்றும் என்னை நீர் அன்பு செய்தது போன்று அவர்களையும் அன்பு செய்தீர் என்றும் உலகம் கண்டுணரும்… நான் உமது பெயரை அவர்கள் அறியச் செய்தேன், தொடர்ந்து அதை அறியச் செய்வேன், அதனால் நீர் என்னை அன்பு செய்த அன்பு அவர்களில் இருக்கும், இவ்வாறு நானும் அவர்களில் இருப்பேன்.’’

8. கடவுள் நம்மைத் தமது திரித்துவ உறவுநிலைக்குள் கொண்டுவர விரும்புகிறார், அதாவது நாம் அவரது வாழ்விலும் அவரது நிறைவான அன்பிலும் பங்குபெற முடியும். அவரது வாழ்வுக்குள் தொடக்கத்தைக் கொண்டு அதில் பங்கு பெறுகிறவர்கள், ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதுவத் திருச்சபையின் ஒரு பகுதியாக இருக்கின்றனர்.

9. ஹிப்போ புனித அகுஸ்தீனின் ஒரு செபம் (திரித்துவம் பற்றி, 15:28):
‘‘எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, தந்தை, மகன், தூய ஆவியாரே, நாங்கள் உம்மில் நம்பிக்கை வைக்கிறோம். நீர் திரித்துவமாக இல்லையெனில், ‘‘அனைத்து நாடுகளுக்கும் சென்று, சீடர்களை உருவாக்குங்கள்; தந்தை, மகன், மற்றும் தூய ஆவியாரின் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்கு கொடுங்கள்’’ என்று உண்மையாகச் சொல்லியிருக்க மாட்டீர். கடவுளாகிய ஆண்டவரே, நாங்கள் கடவுளாகிய ஆண்டவராக இல்லாத ஒருவரின் பெயரால் திருமுழுக்கு பெற விட்டிருக்கவும் மாட்டீர். நீர் திரித்துவமாகவும் ஒரே கடவுளாகிய ஆண்டவராகவும் இல்லாதிருந்தால், ‘இஸ்ரயேலே, செவிகொடு! உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே கடவுள்’ என்று இறைக் குரல் சொல்லியிருக்காது.’’